*3*

# தேவன் ஒரு மக்களினத்தை மீட்கிறார்

## (யாத்திராகமம் 3 & 14)

*நாம் யாவருமே, "இன்னும் இது மற்றோரு நாள்" ஆக இருக்கும் என்று நினைத்துத் தொடங்கி, ஆனால் முற்றிலும் எதிர்பாராத சில விஷயங்கள் நடந்த நாளைக் கொண்டிருக்கிறோம். அதுவே யாத்திராகமம் 3ம் அதிகாரத்தில் மோசேக்கு நடந்தது. 1ம் வசனம், மோசே தமது மாமனாரின் ஆடுகளை மீதியான் வனப்பகுதியில் மேய்த்துக்கொண்டிருந்தார், அதை அவர் கடந்த நாற்பது ஆண்டுகளாகச் செய்து கொண்டிருந்தது போன்றே செய்தார், அப்போது வழக்கத்திற்கு மாறான சில விஷயங்கள் நடந்தன என்று நமக்குக் கூறுகிறது.*

*மோசே, ஆபிரகாமின் சந்ததிகளில் ஒருவராக, ஒரு எபிரெயராகப் பிறந்திருந்தார். இந்தக் குடும்பம் தேவன் வாக்களித்திருந்தபடியே ஒரு பெரிய மக்களினம் ஆனது; ஆனால் அவர்கள், எகிப்திய அரசரான பார்வோனால் படிப்படியாக அடிமைப்படுத்தப்பட்டனர். தேவனுடைய இடையிடுதலினால் மோசே பார்வோனின் வீட்டில் வளர்க்கப்பட்டார் (யாத்திராகமம் 2:1-10), ஆனால், எபிரெய அடிமை ஒருவரை அடித்ததற்காக எகிப்திய ஆளோட்டி ஒருவரை அவர் கொன்ற பின்பு, எகிப்தை விட்டு ஓடிப்போக நேர்ந்தது. (இது அவர் தமது மக்களை விடுவிப்பதற்காக மேற்கொண்ட, காலத்திற்கு முந்திய முயற்சியாக இருந்தது, இது தோல்வியடைந்தது என்பது உறுதி; நடபடிகள் 7:25.) மோசே மீதியான் நாட்டிற்குச் சென்று, திருமணம் செய்து, வாழ்வில் தேவனுடைய மக்களை வழிநடத்துதல் அல்ல, ஆனால் ஆடுகளை மேய்த்தலே தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பு என்று முடிவு செய்தார்.*

*இருப்பினும், தேவன் இன்னொரு திட்டத்தைக் கொண்டிருந்தார். வழக்கத்திற்கு மாறாக அந்த நாளில், மோசே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, தீப்பற்றி எரிந்தும் தீயினால் அழிக்கப்படாத புதர் ஒன்றைக் கண்டார். அந்த வினோதமான காட்சியைப் பார்க்கப் புறம்பே திரும்பிய போது அவரிடத்தில் கர்த்தர் பேசி, அவர் பரிசுத்த பூமியில் நிற்பதாக அவருக்குக் கூறினார் மற்றும் அவர் தம்மை "நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்று அடையாளப்படுத்தினார் (3:6). நம்மால் கற்பனை செய்யக் கூடும்படி, இந்த நிகழ்ச்சி மோசேயின் அந்த நாளை மாத்திரமல்ல ஆனால் அவரது வாழ்வு முழுவதையுமே - மற்றும் இஸ்ரவேல் மக்களின் வாழ்வு முழுவதையுமே - மாற்றிப்போட்டது.*

*தேவன் பின்வரும் திட்டத்தைக் கொண்டிருப்பதாக மோசேக்குக் கூறப்பட்டது: அவர் இஸ்ரவேல் மக்களை அவர்களின் அடிமைத்தளையில்*

*இருந்து விடுவித்து அவர்களை "நல்ல மற்றும் விசாலமான ஒரு நாட்டிற்கு" (கானானுக்கு) வழிநடத்திச் செல்வார். மோசே தேவனுடைய பின்வரும் செய்தியுடன் பார்வோனிடத்தில் செல்லுதல் மூலம் இந்தச் செயல்முறையைத் தொடங்க வேண்டியிருந்தது: "என் ஜனங்களைப் போகவிட வேண்டும்!" (காண்க 5:1; 8:1; 9:1.) அந்தத் திட்டம் மோசேக்கு வசதியானதாக இருக்கவில்லை, எனவே அவர் அந்த வேலையைச் செய்யத் தாம் சரியான மனிதர் அல்ல என்று காண்பிக்கும் விருப்பநோக்குடன், பல சாக்குப்போக்குகளை அளித்தார். கடைசியாகத் தேவன் செயல் விளைவில், "போ!" என்று மாத்திரம் அவருக்குக் கட்டளையிட்டார். மோசே தயக்கத்துடன் சென்றார். தேவன் முன்னுரைத்திருந்தபடி (4:21), பார்வோன் இதைக் கவனிக்க மறுக்குமளவுக்கு அவரது இருதயம் கடினப்படுத்தப்பட்டது. தேவன் எகிப்தின் மீது பத்து வாதைகளை வரச்செய்த பின்புதான், மக்கள் செல்லும்படி பார்வோன் அனுமதித்தார் (யாத்திராகமம் 7-11). இருப்பினும் அதற்குப் பின்பும்கூட, பார்வோன் தமது மனதை மாற்றிக்கொண்டு இஸ்ரவேல் மக்களைப் பின்தொடர்ந்து சென்று, செங்கடலுக்கு எதிரே அவர்களைச் சிக்கவைத்தார். தேவன், தண்ணீரைப் பிளந்து மக்கள் உலர்நிலத்தின் வழியே கடந்து செல்லும்படி செய்தார். பார்வோன் தமது தேடுதலைத் தொடர்ந்தபோது, தண்ணீரானது எகிப்தியர்களை மூடிப்போட்டு, அவர்களின் படையை அழித்தது. நிகழ்வுகளின் இவ்வரிசை "வெளியே செல்லுதல்" என்று அர்த்தப்படும் exodos ("யாத்திரை") என்று அது முதல் அறியப்பட்டுள்ளது. இவ்வார்த்தை, இந்நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்துள்ள பழைய ஏற்பாட்டின் புத்தகத்தின் தலைப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*யாத்திரை என்பது இஸ்ரவேல் வரலாற்றில் மாபெரும் தனிநிகழ்வாக இருந்தது. இது இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு மக்களினம் என்ற வகையில் அவர்களின் அடையாளத்தைக் கொடுத்தது. வல்லமையுள்ள இந்தச் செயலின் மூலமாகத் தேவன் அவர்களை விடுவித்து அவர்களை ஒரு மக்களினமாக உருவாக்கத் தொடங்கினார். அந்த நாளில் இருந்து, அவர்கள் தங்களை, கர்த்தர் இந்த வல்லமை நிறைந்த செயலின் மூலமாக விடுவித்த மக்களாகக் கண்டனர். இந்த அம்சத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள இந்த யாத்திரை, இயேசு சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குச் சமமானதாக உள்ளது, ஏனெனில் இந்த இரு நிகழ்வுகளில் இருந்துதான் கிறிஸ்தவர்கள் தங்கள் மீட்பையும் ஒரு மக்களினம் என்ற வகையில் தங்கள் அடையாளத்தையும் தரவழைக்கின்றனர்.*

*யாத்திராகமம் இஸ்ரவேல் மக்களுக்கு அவர்களின் தேவனைப் பற்றிய உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்திற்று என்பது இதன் தனிச்சிறப்பிற்கான இன்னொரு காரணமாக உள்ளது. 430 ஆண்டுகள் அடிமைத்தளையில் இருந்த பின்னர் அவர்கள், ஏதோ ஒருவகையில் அவருடனான தொடர்பை இழந்திருந்தனர். அவர்கள் புறதெய்வ வணக்கச் சூழ்நிலையில் வாழ்ந்தனர், அவர்களை வழிநடத்தத் தேவனுடைய வார்த்தையோ, அவர்கள் ஆராதித்த தேவனின் நினைவாகச் சேவிக்க ஒரு ஆலயமோ அவர்களை அறிவுறுத்தி வழிநடத்த ஆசாரியத்துவமோ இல்லாதிருந்தனர். இஸ்ரவேல் மக்கள் மோசேயை அனுப்பியது யார் என்பது பற்றிய கருத்து எதுவும் கொண்டிருக்க மாட்டார்கள் என்பது, எகிப்திற்குச் செல்ல மோசே தயங்கியதற்கான*

*காரணத்தின் ஒரு பகுதியாக இருந்தது (யாத்திராகமம் 3:13). யாத்திராகமத்தின் நிகழ்வுகளில் இருந்து, இஸ்ரவேல் மக்கள் தங்கள் தேவனுடைய பண்புகளை அறிந்து கொண்டனர்:*

> *இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சித்தார்; கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்டார்கள். கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள் (யாத்திராகமம் 14:30, 31).*

## தமது வார்த்தையைக் காப்பாற்றும் தேவன்

*யாத்திராகமம், இஸ்ரவேல் மக்களின் அடிமைத்தளை மற்றும் விடுதலை ஆகியவற்றைப் பற்றி முதல் குறிப்பைக் கொண்டுள்ள புத்தகம் அல்ல. உண்மையில், ஆபிரகாமுடன் தேவன் தமது உடன்படிக்கையை ஏற்படுத்தியபோதே, அவர் இப்படிப்பட்ட நிகழ்வுகளின் வரிசை நடந்தேறும் என்று முன்னுரைத்திருந்தார்:*

> *... உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள் (ஆதியாகமம் 15:13, 14).*

*இஸ்ரவேல் மக்கள் அடிமைகள் ஆகும்படி தேவன் அவர்களை மறந்து விட்டிருக்கவில்லை என்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாகவே அவர், அவர்களைப் பிடித்து வைத்திருந்தவர்களைத் தோல்வியடையச் செய்து அவர்களை அடிமைத்தளையில் இருந்து வெளியே கொண்டு வருதலுக்கான தமது வாக்குத்தத்தத்தையும் மறந்துபோய்விடாதிருந்தார்.*

> *சிலகாலம் சென்றபின்பு, எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக் கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார் (யாத்திராகமம் 2:23-25).*

*தேவன் தமது மக்களுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அவற்றைக் காத்துக்கொள்ளுதல் என்பது அவரது இயல்பில் ஒரு பகுதியாக இருக்கும் காரணத்தினால், ஒரு எழுத்தாளர் "தொடர்ச்சியின் தேவன்" என்று அவரை அழைத்தார்.[1] ஒருவேளை இஸ்ரவேல் மக்கள் தேவனை மறந்திருக்கலாம், ஆனால் தேவன் இஸ்ரவேல் மக்களை மறந்துபோய்விடவில்லை. அவர் ஆபிரகாமுக்குத் தாம் வாக்குத்தத்தம் செய்திருந்ததைக் காத்துக்கொள்ளும் விருப்பநோக்கம்*

கொண்டிருந்தார்.

தேவன் தமது வார்த்தையைக் காத்துக்கொள்கிறார், அவர் மனம்போன போக்கின்படி செல்பவராகவோ அல்லது முரண்பட்ட உளப்போக்கு உடையவராகவோ இருப்பதில்லை என்பதை அறிதல் நமக்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது. மல்கியா 3:6ம் வசனம், "நான் கர்த்தர், நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை" என்று கூறுகிறது. இது பழைய ஏற்பாட்டின் முடிவுப் பகுதியில் உள்ள ஒரு முக்கியமான நினைவூட்டலாக உள்ளது, ஏனெனில் "பழைய ஏற்பாட்டின் தேவன்" என்பவர் "புதிய ஏற்பாட்டின் தேவன்" என்பவரில் இருந்து வேறுபட்டுள்ளார் என்று நினைக்கும் எண்ணப்போக்கு அடிக்கடி உள்ளது. தேவன், எழுதப்பட்ட தமது வசனத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒன்றுபோலவே இருக்கிறார், எனவே நாம் பழைய ஏற்பாட்டில் இருந்து அவரைப் பற்றிக் கற்றுக்கொள்ளும் யாவையும் கிறிஸ்துவின் உடன்படிக்கையின்கீழ் வாழ்கிறவர்களுக்கு மதிப்புமிக்கதாகவே நிலைத்துள்ளது. அதுபோலவே புதிய ஏற்பாடும், "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்று நமக்குக் கூறுகிறது (எபிரெயர் 13:8). அவர் முன்பு கூறியது இன்னமும் நிற்கிறதா இல்லையா என்பதைப் பற்றியோ அல்லது அவர் ஒரு மோசமான மனநிலையில் இருப்பதால் அவரைப் பிரியப்படுத்தும் வாய்ப்பு எதையும் நாம் கொண்டிருத்தல் பற்றியோ எந்தக் கவலையும் இல்லாமல், நாம் அவர்மீது நம்பிக்கை வைக்க முடியும் என்றே இது அர்த்தப்படுகிறது. தேவன் தமது வார்த்தையை எப்போதும் காத்துக்கொள்கிறார்.

"அப்படியானால், இஸ்ரவேல் மக்கள் சார்பாகச் செயல்படுவதற்குத் தேவனுக்கு ஏன் நானூற்று முப்பது ஆண்டுகள் ஆனது? அவர் தமது வார்த்தையைச் சற்று முன்னதாகவே காத்துக்கொண்டிருக்கக் கூடாதா?" என்று சிலர் கேட்கலாம். அவர் அவ்வாறு செய்திருக்க முடியும், ஆனால் அவ்வாறு செய்வதை அவர் தேர்ந்துகொள்ளவில்லை. தேவனுடைய காலமுறையும் எப்போது செயல்படுவது என்பது பற்றிய அவரது தேர்ந்துகொள்ளுதலும் அவருடைய சிறப்புரிமைகளாக உள்ளன மற்றும் நாம் அவரது ஞானத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அவர் செயல்படுவதற்காக நாம் காத்திருக்கையில், அவர் எப்போதுமே தமது வார்த்தையைக் காக்கிறார் என்பதில் நாம் முழு நிச்சயமாக இருக்க முடியும். காத்திருத்தல் என்பது நீண்ட காலத்திற்கு முன்பு இஸ்ரவேல் மக்களுக்கு இருந்ததில் இருந்து இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு வேறுபட்டு இருப்பதில்லை. நிறைவான விடுதலையாளரான இயேசு, காட்சிக்கு வருவதற்கு முன்னர், மோசேயின் காலத்தில் இருந்து ஆயிரம் ஆண்டுகள் கடந்து சென்றன. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக அவரது மறுவருகைக்காகக் காத்திருக்கின்றனர். தேவன் செயல்படத் தொடங்கிச் செயல்படும்போது ஏன் இப்போது தேர்ந்துகொண்டார் என்பது நமக்குச் சொல்லப்படவில்லை. நாம் அவர்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று மாத்திரம் நமக்குக் கூறப்பட்டுள்ளது.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற நாம் நீண்ட காலம் காத்திருப்பதாக நாம் நினைக்கும்போது, யோசுவா 1:5ம் வசனத்தின் வார்த்தைகளை நாம் நினைவுகூர முடியும். மோசேயின் மரணத்தைத் தொடர்ந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் மக்களை

*வழிநடத்தும்படி யோசுவாவுக்குத் தேவன் ஆணையிட்டார். நாட்டை வெற்றிகொண்டு பிடித்தல் என்பது கடினமான யுத்தம் நடத்தும் முகாமாக இருக்கும். இந்த வெற்றியினூடே மக்களை வழிநடத்திச் செல்லுதல் என்பது ஊக்கமிழக்கச் செய்யும் பணிப்பொறுப்பாக இருக்கும் என்பதையும் மோசேயின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் என்பது (யோசுவா என்ற) இளம் மனிதருக்கு அச்சமூட்டும் செயலாக இருக்கும் என்பதையும் தேவன் அறிந்திருந்தார். அவர், "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார் (யோசுவா 1:5).*

*தேவன் ஆபிரகாமின் சந்ததிகளுக்குச் செய்யப்போவதாகக் கூறியவற்றின் ஒரு பகுதி நிறைவேற்றப்படப் போவதாக இருந்தது. அவர் ஆபிரகாமின் குடும்பத்தை மாபெரும் மக்களினமாக்கி இருந்தார் மற்றும் அவர்களை அவர் எகிப்திய அடிமைத்தளையில் இருந்து விடுவித்திருந்தார். அடுத்ததாக அவர் இஸ்ரவேல் மக்களின் முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்த நாட்டை, அவர்கள் வெற்றி கொண்டு கைப்பற்றக் கூடியவர்கள் ஆக்குவார். தேவன் தமது வார்த்தையை எப்போதுமே காத்துக்கொள்கிறார்.*

## மற்ற எல்லாத் தேவர்களையும் விட மாபெரியவராக இருக்கிற தேவன்

*பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு, விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுதல் அல்லது விலக்குதல் பற்றிப் பவுல் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதியதில், பின்வரும் கூற்றை அவர் தமது அறிவுறுத்துதலுக்கு முன்னுரையாக்கினார்:*

> *விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப்பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை யென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் (1 கொரிந்தியர் 8:4-6).*

*ஒரே ஒரு உண்மையான தேவன்தாம் இருக்கிறார் என்பது நிச்சயம், ஆனால் ஆராதிக்கப்படுகிற எதுவும் ஒரு "தேவராக" உள்ளது; எப்போதுமே போட்டி "தேவர்கள்" (மற்றும் "தேவிகள்") உள்ளன. பழங்கால வசனங்களில் இருந்து நாம், ஏறக்குறைய நாற்பது மாறுபட்ட தேவர்கள் எகிப்தியர்களால் வணங்கப்பட்டன மற்றும் இன்னும் இதைக் காட்டிலும் அதிகமானவர்கள் இருந்திருக்கலாம் என்று அறிகிறோம். இருப்பினும் எகிப்தில் இருந்து இஸ்ரவேல் மக்கள் புறப்பட்ட பயணமானது, இஸ்ரவேல் மக்களின் தேவன் அவர்கள் எல்லாரைக் காட்டிலும் மாபெரியவராக இருந்தார் என்பதை நிரூபித்தது.*

மோசே தேவனுடைய ஊழியம் செய்யாதிருக்க இன்னமும் சாக்குப்போக்குச் சொல்ல முயற்சி செய்துகொண்டிருந்போது, அவர் பின்வரும் கேள்வியைக் கேட்டார்: "நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், 'உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார்' என்று அவர்களுக்குச் சொல்லும்போது, 'அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால்,' நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்?" (யாத்திராகமம் 3:13). இஸ்ரவேல் மக்கள், தாங்கள் ஆராதிக்க வேண்டிய தேவனுக்குக் குறிப்பிட்ட இயற்பெயரை விரும்பினர் என்பதை மோசே உணர்ந்தறிந்தார் என்பது தெளிவு. எகிப்தியரின் பல்வேறு தேவர்கள் பெயர்களைக் கொண்டிருந்தனர் மற்றும் இஸ்ரவேல் மக்கள் தங்கள் தேவனுடைய பெயரை அறிவது அவசியமாயிருந்தது. அதற்கு கர்த்தரின் பதிலுரை பின்வருமாறு:

> அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார். மேலும், தேவன் மோசேயை நோக்கி: ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக; என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம் (யாத்திராகமம் 3:14, 15) என்றார்.

"இருக்கிறவராக இருக்கிறேன்" என்பது, "நான் என்னவாக இருக்கிறேனோ அவ்வாறே இருக்கிறேன்," அல்லது "நான் என்னவாக இருப்பேனோ அவ்வாறே இருப்பேன்" என்றும் மொழிபெயர்க்கப்படக்கூடிய எபிரெயச் சொற்றொடரின் தோராயமான மொழிபெயர்ப்பாக உள்ளது. "YHWH" என்பது எபிரெய வினைச்சொல்லாக உள்ளது; இது அடிக்கடி, "tetragrammaton" என்று அழைக்கப்படுகிறது. பழங்கால எபிரெய வார்த்தைகள் எல்லாவற்றையும் போலவே, இது தோற்ற காலத்தில் உயிரெழுத்துக்கள் இன்றி எழுதப்பட்டது. இது மிகச்சரியாக எவ்வாறு உச்சரிக்கப்பட்டது என்பதை நாம் அறிவது இயலாது என்று இது அர்த்தப்படுகிறது. "Yahweh" (இது சிலவேளைகளில் "Jahveh" என்று எழுதப்படுகிறது ஆனால் ஒரே மாதிரி உச்சரிக்கப்படுகிறது) என்பது நல்லதொரு யூகமாக உள்ளது.[2]

"YHWH" என்பது அர்த்தப்படுத்துவது என்ன? தேவன் தம்மை ஏன் ஒரு வினைச்சொல் கொண்டு பெயரிட்டார்? சாத்தியக்கூறுகள் ஏராளமானவையாக இருந்தபோதிலும், இந்தப் பெயரானது "உண்மையாகவே தேவனாக இருக்கிற தேவன், எப்போதுமே இருந்துள்ளவர்" என்பது போன்ற கருத்தையே அர்த்தப்படுத்துவதாகப் பெரும்பாலும் காணப்படுகிறது. இது, தேவன் தாமே தம்மை உறுதிப்படுத்துபவராகவும் சுயமாக நிலைநிற்பவராகவும் இருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. இது அவருக்கும் எகிப்தியரின் பொய்த்தேவர்களுக்கும் (மற்றும் பிற எல்லா விக்கிரகங்களுக்கும்) இடையில் ஒரு கூர்மையான நேர்மாறைச் சுட்டிக்காண்பித்தது. விக்கிரகங்கள் தங்கள் உருவாக்கம், தங்கள் நடமாட்டம், தங்களுக்காகப் பேசுதல் மற்றும் தங்களைப் பராமரித்தல் ஆகியவற்றிற்குத் தங்களை ஆராதிப்பவர்களையே எப்போதும் சார்ந்துள்ளன.

(ஏசாயா 44:9-20 வசனப் பகுதியில், விக்கிரக ஆராதனையின் அறிவற்ற நடத்தை பற்றி ஏசாயாவின் கொட்டுவது போன்ற விமர்சனத்தை வாசிக்கவும்.) இஸ்ரவேல் மக்களின் தேவனாக இருந்தவர் உண்மையான ஒரே தேவனாகவும் உயிருள்ள தேவனாகவும் இருக்கிறார். அவரது படைப்புயிர்கள், தங்கள் இருப்பு, பராமரிப்பு மற்றும் அக்கறை ஆகியவற்றிற்கு அவரையே சார்ந்துள்ளன. தேவன், பெயருக்குத் தகுதியானவராகக்கூட இருக்கிற ஒரே தேவனாக இருக்கிறார் என்று தம்மை அறிவித்துக் கொண்டிருந்தார்.

பார்வோனின் முரட்டாட்டத்தின் காரணமாகத் தேவன் எகிப்திற்கு எதிராகக் கொண்டு வந்த பத்து வாதைகள், எகிப்தின் பல்வேறு தேவர்கள் மீது தேவனுடைய வல்லமையைக் காண்பிக்கும்படி வடிவமைக்கப் பட்டிருந்தன. நைல் நதியானது ஆண்டுதோறும் தனது கரைகளின் மீது வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியதாலும் அது எகிப்தியரின் பண்ணை நிலங்களில் உயிர் வாழ்வை நிலைநிறுத்தும் ஈரப்பதத்தையும் மண்வளத்தையும் கொண்டு வந்ததாலும், அந்த நதியே ஒரு தெய்வமாக மதிக்கப்பட்டது. நதியோரச் சேற்றில் இருந்து தவளைகள் எழும்புவது அடிக்கடி காணப்பட்டதால், அவைகள் தெய்வீகத்தின் வெளிப்பாடுகள் என்று எகிப்தியர்கள் முடிவு செய்தனர், அதேபோன்று அழுகும் பொருள்களில் இருந்து அற்புதவிதமாகத் தோன்றியதாகக் காணப்பட்ட ஈக்களும் இருந்தன என்றும் முடிவு செய்தனர். பார்வோனே ஒரு தேவனாக இருக்கிறார் என்று நம்பப்பட்டு அவர் தமது மக்களால் ஆராதிக்கப்பட்டார். ஆகையால், வாதைகள் எகிப்தைத் தாழ்த்தியபோது அவைகள் "இயற்கைப் பேரழிவுகளின்" வரிசைத்தொடராக மாத்திரமல்ல, ஆனால் எகிப்தில் ஆராதிக்கப்பட்ட பொய்த்தேவர்களின் மீது வந்த நியாயத்தீர்ப்பாகவும் இருந்தன.

மோசே முதன் முதலாகப் பார்வோனைப் பார்க்கவும் இஸ்ரவேல் மக்களைப் புறப்பட்டுச் செல்லும்படி அவர் அனுமதிக்க வேண்டும் என்று கேட்கவும் சென்றபோது, பார்வோன், "நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை" என்று முரட்டுத்தனமாகப் பதில் அளித்தார் (யாத்திராகமம் 5:2). வாதைகள் முடிந்த வேளையில், தேவன் உண்மையிலேயே யார் என்பதை பார்வோனும் எகிப்தில் உள்ள எல்லாரும் அறிந்திருந்தனர்: மற்ற எல்லா "தேவர்களுக்கும்" மேலான ஒருவர் மற்றும் பார்வோன் கூட பணிந்து வணங்கியாக வேண்டிய ஒருவர். பார்வோனின் தலைப்பேறான மகனின் மரணமானது இந்த உண்மையைத் தெளிவாக்கிற்று.

கர்த்தர் மோசேயிடம், "இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக" என்று அறிவுறுத்திய போது (காண்க 3:14), அவர் (மோசே), உண்மையான ஒரே தேவனை விசுவாசித்து, உண்மையில் "தேவர்களாக இல்லாதிருந்த" மற்ற எல்லாத் "தேவர்களின்" உரிமைகோருதல்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று அவரை (மோசேயை) அழைத்தார் (காண்க 2 நாளாகமம் 13:9; நடபடிகள் 19:26; கலாத்தியர் 4:8). நமது சொந்த உலகத்தில் (செல்வம், சந்தோஷம், தொழில் நுட்பம், இராணுவ மற்றும் அரசியல் பலம் போன்ற) போட்டி "தேவர்கள்" பல இருக்கும் காரணத்தினால், இதையே (உண்மையான ஒரே தேவனை ஆராதனை) செய்யும்படி நாமும் அழைக்கப்பட்டிருக்கிறோம். தமது மக்களை மீட்கச் செயல்படுகிற மற்றும் நமது பாவம் என்ற பிரச்சனைக்குத் தீர்வு அளிக்கிற

*ஒரே ஒரு தேவன் இன்னமும் இருக்கிறார்.*

## பரிசுத்தமான தேவன்

*மோசே, எரியும் புதரை நெருங்குகையில். தேவன் அவரை அழைத்து, "இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்று கூறினார் (யாத்திராகமம் 3:5). தேவனுடைய பிரசன்னத்தின் காரணமாக, மோசே நின்றிருந்த இடம்கூடப் பரிசுத்தமானதாக இருந்தது. தேவனுடைய "பரிசுத்தம்" பற்றிப் பேசுதல் என்பது அவரது "தனித்தன்மை" பற்றிப் பேசுதலாக உள்ளது. அவர் தம்மில் தாமே உள்ள ஒரு வகையைச் சேர்ந்தவராக இருக்கிறார்; அவர் நம்மைப்போன்றவராக இருப்பதில்லை, மற்றும் நாம், அவரது அழைப்பினாலும் அவர் ஆணையிடும் நடக்கையினாலும் மாத்திரமே அவரை அணுக இயலும்.*

*யாத்திராகமத்தின் கடைசி பதினைந்து அதிகாரங்கள் யாவும் பரிசுத்தத்தைப் பற்றியதாக உள்ளது. இந்த அதிகாரங்களில் தேவன் மோசேயிடம். ஆசரிப்புக்கூடாரம் (எடுத்துச் செல்லப்படக் கூடியதான, ஆராதிக்கும் இடம்), அங்கு செலுத்த வேண்டிய பலிகள், ஆசாரியத்துவம் (ஆசாரியர்கள் எவ்வாறு உடை உடுத்த வேண்டும் என்பது உட்பட) மற்றும் ஆசரிப்புக்கூடாரத்தின் பொருட்கள் ஆகியவற்றைப்பற்றி அறிவுறுத்தினார். தேவனை ஆராதித்தலுடன் தொடர்புடைய பொருட்கள் எவற்றைக் கொண்டு செய்யப்பட வேண்டும் என்பது கூடக் குறிப்பிடப்பட்டது, மற்றும் உடன்படிக்கை பெட்டியை யார் தூக்கிச் செல்ல வேண்டும், அவர்கள் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதும் கூட குறிப்பிடப்பட்டது. நமக்கு "தேவையற்ற விபரங்கள்" போன்று காணப்படுபவை யாவும், தேவனுடைய இயல்பைப் புரிந்து கொள்வதற்கு இஸ்ரவேல் மக்களுக்கு இன்றியமையாத விபரங்களாக இருந்தன. இந்த குறிப்புரைகள், தேவன் பயபக்தியுடன் அணுகப்பட வேண்டும் என்று போதித்தன.*

*சில வேளைகளில் கிறிஸ்தவர்கள், "நாம் பழைய ஏற்பாட்டின்கீழ் வாழ்வதில்லை" என்பதால், ஆராதனையில் நாம் பயபக்தியுடன் தேவனை அணுகவேண்டும் என்பது போன்ற, பரிசுத்தம் பற்றிய விஷயங்களைக் குறித்து அக்கறைப்படத் தேவையில்ல என்ற கருத்தைக் கொண்டிருப்பது திகைப்புக்கு உரியதாக உள்ளது. இதை நம்பும்படி வேதவசனங்கள் எதுவும் நம்மை வழிநடத்துவதில்லை என்பதால் இது ஒரு வினோதமான கருத்தாக உள்ளது. கிறிஸ்துவின் சிலுவை தேவனுடைய பரிசுத்தமான இயல்பை மாற்றவில்லை. மாறாக தேவனுடைய பரிசுத்தத்தின் காரணமாகவே சிலுவை தேவைப்பட்டு இருந்தது. பாவம் பரிகரிக்கப்பட வேண்டியிருந்தது. அது வெறுமனே காணாமல் விடப்பட இயலாது இருந்தது. நிச்சயமாகவே நாம், பழங்கால இஸ்ரவேல் மக்களின் ஆராதனையின் அதே வடிவங்களைப் பின்பற்றுவதில்லை, ஆனால் நமது ஆராதனை நிறைந்த எண்ணப்போக்கு அவ்வாறே இருக்க வேண்டி உள்ளது.*

*தேவன் பரிசுத்தமானவராக இருப்பதால், நாம் அழிவைப் பெற்றுக்கொள்ளாமல் தேவனுக்கு அடங்கி நடக்க மறுக்க இயலாது என்பதை யாத்திராகமத்தின் எடுத்துரைப்பு சுட்டிக்காட்டுகிறது. மோசேயும் பார்வோனும் முதன் முதலாகச் சந்தித்தபோது, பார்வோன் மோசேயிடம்*

பின்வரும் அகற்றப்பட வேண்டிய கேள்வியைக் கேட்டார்: "நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்?" (யாத்திராகமம் 5:2). உண்மையில் இதுதான் யாத்திரை நிகழ்ச்சி முழுவதிலும் மற்றும் யாத்திராகமம் புத்தகத்திலும் மையமான கேள்வியாக உள்ளது: "கர்த்தர் என்பவர் யார்?" பார்வோன் "தனது இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டதன்" மூலம் தேவனைப் புறக்கணித்த காரணத்தினால் ஒரு கடினமான வழியில் கற்றுக்கொண்டார் (காண்க யாத்திராகமம் 8:15, 32). தேவன் இந்தப் பதிலையே முன்னுரைத்திருந்தார். பார்வோன் கடைசி முறையாகத் தமது இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டபோது, மற்றும் இஸ்ரவேல் மக்கள் கடலுக்கு எதிராக அடைக்கப்பட்டு இருந்தபோது, மோசேயிடத்தில் தேவன் பின்வருமாறு கூறினார்:

> எகிப்தியர் உங்களைப் பின்தொடர்ந்து வரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனாலும் அவன் இரதங்கள் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன். இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரராலும் மகிமைப்படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார் (யாத்திராகமம் 14:17, 18).

தேவன் தமது நியாயத்தீர்ப்பின் வல்லமையினால் கொடுத்த சாட்சியின் மூலமாக, எகிப்தியர்கள் தேவன் தேவனாக இருக்கிறார் என்ற வலிவார்ந்த பாடத்தைக் கற்றனர். தண்டனையின் மூலமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய அதே தவறை இஸ்ரவேல் மக்கள் செய்வதைத் தேவன் விரும்பவில்லை, எனவே அவர்களுக்கு அவர் தமது பரிசுத்தம் பற்றிய எச்சரிக்கையையும் அறிவுறுத்துதலையும் ஏராளமாகக் கொடுத்தார். அவர் புதிய ஏற்பாட்டின் பக்கங்களின் மூலமாக அதேபோன்ற எச்சரிக்கை மற்றும் அறிவுறுத்துதலை சபைக்குக் கொடுக்கிறார். கிறிஸ்தவர்கள், தேவனுடைய பரிசுத்த தன்மையை மதிக்கவும் நமது சொந்த வாழ்வில் அந்தப் பரிசுத்தத்தைப் பிரதிபலித்து பாவத்தை தவிர்க்கும் ஒழுங்கு நடக்கையைக் கொண்டிருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (உதாரணமாக, 2 கொரிந்தியர் 7:1; எபிரெயர் 10:26-31; 12:25-29; 1 பேதுரு 1:15 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.)

## தமது மக்களை அழைத்து வல்லமை தரும் தேவன்

இஸ்ரவேல் மக்களின் விடுதலையாளராக இருக்கும்படி மோசேயைத் தேவன் அழைத்தபோது, அவர் (தேவன்) அவருக்கு (மோசேக்கு) பணிவிபரத்தைக் கொடுத்தது மட்டுமின்றி அதைச் செய்யக் கூடிய திறனையும் கொடுத்தார். மோசே, தாம் மக்களிடத்தில் செல்லும்போது, அவர்கள் தம்மை நம்ப மாட்டார்கள் என்று மறுத்தபோது, அவர் நிரூபணமாகப் பயன்படுத்தும்படி அடையாளங்களை அவருக்குத் தேவன் கொடுத்தார்: பாம்பாக மாறும் கோல், தமது கையைத் தொழுநோய் கொண்டதாக ஆக்கி திரும்ப அதைச் சுத்தமாக்குதல் மற்றும் தண்ணீரை இரத்தமாக்கும் வல்லமை (4:1-9). அவர் தேவனுக்காகப் பேசப் போதிய பேச்சுத்திறன் கொண்டிருக்கவில்லை என்று மேலும் வேண்டுகோள் விடுத்தபோது, அவருக்குத் தேவன், தாமே மனிதரின் வாயை உண்டாக்கினர் என்பதையும், எந்த ஒரு நபரையும் தாம் விரும்பினால் நிச்சயமாகவே

பேச்சுத்திறன் உள்ளவராக்க முடியும் என்பதையும் நினைவூட்டினார். அத்துடன் கூடுதலாக, மோசேக்காக "பேசுபவராக" இருக்கும்படி மோசேயின் சகோதரரான ஆரோனை அவர் அனுப்பி வைத்தார் (4:10-17).

பிற்பாடு, இஸ்ரவேல் மகள் கடலுக்கு எதிராகத் தங்கள் முதுகுகள் இருக்கும்படி அகப்படுத்தப்பட்டு, எகிப்திய இரதங்களின் மேலான வலிமைக்குத் தப்பக் கூடாதவர்களாக இருந்தபோது, தப்பிக்கத் தேவன் ஒரு காட்சிக்குரிய வழியை அளித்தார். பின்பு அவர், நாற்பது ஆண்டுகள் அவர்கள் வெறும் வனாந்திரத்தில் அலைந்து திரிந்தபோது, அங்கே திரளான மக்கள் கூட்டம் உயிர்பிழைப்பதைச் சாத்தியமாக்கினார்.

தேவன் இன்னும் தமது மக்களை அழைத்து வல்லமை தருகிறார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவர், முழு உலகத்திற்கும் இயேசுவின் வரலாற்றைக் கூறி தேவனுடைய அன்பையும் பரிவிரக்கத்தையும் பகிர்ந்து கொள்ளும்படிக்குப் பரிசுத்தமான மக்களாக இருக்க சபையை அழைக்கிறார். இந்தப் பணிப்பொறுப்பு பெரும்பாலும் சிரமமானதாக உள்ளது, ஆனால் இந்தப் பணியைச் செய்து முடிக்கத் தேவையானது எதுவாக இருந்தாலும் அதை நமக்குத் தேவன் எப்போதுமே தருகிறார். இதனால்தான் சபையானது பரிசுத்த ஆவியானவர் பொழியப்படுதலுடன் தொடங்கிற்று. தேவன் வல்லமையைக் கொடுக்கும் வரையிலும், அப்போஸ்தலர்கள்கூட உதவியற்றவர்களாகவே இருந்தனர். ஆவியானவர் வந்த உடன், எல்லாம் மாறிற்று. அதே ஆவியானவர் இன்றைய நாட்களில், ஊழியத்திற்கு நம்மைப் பெலப்படுத்துவதற்கு, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற யாவருக்குள்ளும் தங்கியிருக்கிறார் (நடபடிகள் 2:1-38). கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் இருந்து (நாம் விலகியிருக்கும்படி), சாக்குப்போக்குக் கூற நாம் ஒருக்காலும் முயற்சி செய்யக் கூடாது. அவர் என்ன செய்யும்படி நம்மை அழைக்கிறாரோ, அதைச் செய்வதற்கு நம்மைப் பெலப்படுத்துகிறார்.

## முடிவுரை

மோசேயும் இஸ்ரவேல் மக்களும், அவர்களை அடிமைத்தளையில் இருந்து வெளியேறும்படியும் தமது ஆச்சரியமான சுதந்தரத்திற்குள் வரும்படியும் அழைத்த தேவனை விசுவாசித்து அவர்மீது நம்பிக்கை வைக்கும்படி அவர்களுக்கு அறைகூவல் விடப்பட்டது. அவர் தமது வார்த்தையைக் காக்கிற தேவனாக, மற்ற எல்லா "தேவர்களை" பார்க்கிலும் மாபெரியவராக, முற்றிலும் பரிசுத்தமானவராக மற்றும் தமது மக்களை ஊழியத்திற்கென்று அழைத்து பெலப்படுத்துகிறவராக இருக்கிறார். இன்றைய நாட்களில் தேவன் அதேவிதமாக நிலைத்திருப்பது போன்றே, அவர் தம்மை விசுவாசித்துத் தமக்குக் கீழ்ப்படியும்படிக்கும் அறைகூவல் விடுதலும் உள்ளது.

---

குறிப்புகள்

[1]Paul R. House, *Old Testament Theology* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1998), 92. [2]"Jehovah" என்ற பெயரானது, "YHWH" என்ற வார்த்தையுடன், "Lord" (*'Adonay*) என்பதற்கான வார்த்தையில் இருந்து தழுவப்பட்டு உயிரெழுத்துக்களுடன் இணைகிற ஜெர்மானியக் கண்டுபிடிப்பாக உள்ளது.

## பார்வோனின் இருதயம் கடினமாகுதல்

*வேதாகமத்தை வாசிப்பவர்கள் சிலவேளைகளில், யாத்திராகமத்தில் உள்ள, தேவன் "பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்" என்ற கூற்றைப் பற்றியும், அவர் இந்தக் கடினப்படுத்துதல் பற்றிக் குறிப்பாக முன்னுரைத்தார் என்பதைப் பற்றியும் இடர்பாடு அடைகின்றனர். மேம்போக்காக வாசிப்பவருக்கு, இது பார்வோன் தேவனால் "முன்குறிக்கப்பட்டு," அவர் மீது தேவன் தமது வல்லமையைக் காண்பிக்கும்படி அவர் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டதாக ஒலிக்கலாம். (காண்க யாத்திராகமம் 4:21.) எவரொருவரும் தேவனை எதிர்த்து நிற்க இயலாது, எனவே பார்வோன் கொண்டிருந்த வாய்ப்பு என்ன? இது ஏறக்குறைய, அவர் கீழ்ப்படியாததற்குத் தேவனே காரணமாக இருந்தார் என்றும் பின்பு அவ்வாறு செய்ததற்காக அவரைத் தேவனே தண்டித்தார் என்றும் ஒலிக்கிறது. (பார்வோனின் இருதயம் கடினப்படுத்தப்படுதல் பற்றிய குறிப்புகளுக்கு, யாத்திராகமம் 9:12; 10:20, 27; 11:10 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும். மற்ற வசனங்கள், "பார்வோனின் இருதயம் கடினப்பட்டது" என்று மாத்திரமே கூறுகிறது, இதற்குப் பொறுப்பாக இருந்தது யார் என்பதைப் பற்றி அவைகள் கூறுவதில்லை [7:13, 22; 8:19; காண்க 9:7].)*

*வசனப்பகுதியானது, பார்வோன் தமது சொந்த இருதயத்தைத் தாமே கடினப்படுத்திக் கொண்டார் என்றும் கூறுகிறது; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் இந்தச் செயல்பாடு முழுவதிலும் உதவியற்ற வெறும் கைப்பாவையாக மாத்திரம் இருக்கவில்லை (யாத்திராகமம் 8:15, 32; 9:34; 14:5). தொடக்கத்தில் இருந்தே பார்வோன், கர்த்தரிடம் ஒரு முரட்டுத்தனமான, அடங்காத எண்ணப்போக்கைக் கொண்டிருந்தார், மற்றும் அதன் விளைவுகளை அவர் அனுபவித்தார். தேவன் தாம், யாருடன் செயல்படுகிறாரோ, அந்த மனிதரின் வகையை நன்கு அறிந்திருந்தார், மற்றும் அவர் பரிசுத்தம் மீதான ஒரு பாடத்தை - எகிப்தியர்களுக்கு மாத்திரமல்ல ஆனால் இஸ்ரவேல் மக்களுக்கும்கூட - கற்பிக்கும்படி பார்வோனின் முரட்டுத்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.*

> *தேவனுடைய "கடினப்படுத்துதல்" என்பது, ஆடுகளைக் கழுதைகளாக்கி விடுவதில்லை; அது கழுதைகள் ஒரு தெய்வீக முறுக்குதலினால் தங்கள் உதைத்தலைச் செய்வதை மாத்திரம் உறுதிப்படுத்துகிறது. இதன் விளைவாக, முறுக்கப்படுதலின் மீதான ஒரு உதையானது அந்த மிருகத்தின் மன விருப்பம் அல்லது முறுக்கப்படுதலைக் கொடுக்கிறவரின் ஞானம் ஆகிய இரண்டின் மீது சமமான முன்னுரிமையைப் பண்புபடுத்தக் கூடும். பார்வோன், கடினப்பட்ட தமது இருதயத்தின் பாவத்திற்குத் தாமே பொறுப்பாளியாக எஞ்சியிருக்கிறார் (யாத்திராகமம் 9:34).*[1]

குறிப்பு

[1]Stephen Westerholm, *Preface to the Study of Paul* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1997), 105, n.13.